<u>**மழை நீரை சேமிப்பீர்**</u>

<u>மின்அஞ்சல்</u> ( E-Mail)

நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
எழிலகம் இணைவகம்,
சேப்பாக்கம், சென்னை 5

<u>**ந.க.எண். 67519 /2003 / ஆர்2**</u>   <u>**நாள் 09.12.2003**</u>

பொருள்: குத்தகை – ஆவடி நகராட்சி – 2003–04ம் ஆண்டு – நகராட்சி வாகனம் நிறுத்துமிடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் – மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பு செய்யக் கேட்டல் சம்பந்தமாக

பார்வை: தங்களின் விண்ணப்பம் நாள்: 10.12.03

**குறிப்பாணை**

பார்வையில் கண்டுள்ள தங்களது விண்ணப்பத்தில், ஆவடி நகராட்சியில் 2003–04ம் ஆண்டு நகராட்சி வாகனம் நிறுத்துமிடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ரூ. 1,44,900/-க்கு 31.03.04ம் தேதி வரை வழங்கப்பட்டிருப்பதாகவும், தற்போது பல தனியார்கள் பேருந்து மற்றும் இரயில் நிலையம் அருகில், இதே போல வாகன நிறுத்துமிடங்கள் நடத்தி வருவதால், பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் ரூ. 50,000/– செலவில் விளம்பரம் செய்ததால், மேற்படி தொகைக்கு முதலீடு செய்த தொகை திரும்ப பெற இயலாது என்பதால், கடைகள் மற்றும் திருமண மண்டபங்கள் ஆகியவைகளை ஆவடி நகராட்சி மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட்டது போல, தங்களுக்கும் 01.04.04 முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து வழங்க கேட்கப்பட்டுள்ளது.

2) சென்னை உயர்நீதி மன்றம் CRP எண்கள்: 691 மற்றும் 692/93 மற்றும் CMP எண்கள் 3598 மற்றும் 3599/93 நாள்: 31.10.96ன் தீர்ப்பில், அரசாணை (நிலை) எண்: 285 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 29.04.85ல் நகராட்சி கடைகள், கட்டிடங்கள் போன்ற அசையா சொத்துகளை வசூல் செய்வது போன்ற வருவாய் தரத்தக்க இனங்களுக்குப் பொருந்தாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இதன் நகல் அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களுக்கும் இவ்வலுவலக சுற்றறிக்கை ரூ.மு. எண் 3995/97/ஆர்3 நாள்: 28.02.97 மூலம் அனுப்பப்பட்டுள்ளது.)

3) எனவே, பார்வையில் கண்டுள்ள தங்கள் கோரிக்கையினை ஏற்கவியலாது என்பதால், நிராகரிக்கப்படுகிறது.

4) மேலும் குத்தகை இனங்கள் தொடர்பான முடிவுகள் நகர்மன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டது என்பதால், இது போன்ற கோரிக்கைகள் நகராட்சியிடம் விண்ணப்பிப்பதற்கு பதிலாக, நேரிடையாக இவ்வலுவலகத்திற்கு இனி வரும் காலங்களில் விண்ணப்பிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

(ஒம்) மா. இராஜகுமார்
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

பெறுநர்:
திரு. பி. ரங்கநாதன்
எண் : 117, சின்னம்மன் கோயில்
தெரு, ஆவடி, சென்னை

நகல்: நகராட்சி ஆணையர், ஆவடி (இணைப்புடன்) (மற்ற குத்தகைதாரர்களுக்கு தகுந்த அறிவுரை வழங்க தெரிவிக்கப்படுகிறது)

2. அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் (அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் தகுந்த அறிவுரை வழங்க தெரிவிக்கப்படுகிறது)

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //
கண்காணிப்பாளர்.
செந்தில் 22.10

நகராட்சி நிர்வாக மண்டல
இயக்ககம், சேலம் – 9.

மே.கு.ஓ.மு.எண்.11989/03/அ3 நாள் : 29/12/2003.

தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

நகராட்சி நிர்வாக மண்டல
இயக்குநர், சேலம்.

**பெறுநர்**
அனைத்து நகராட்சி ஆணையர்கள்,
சேலம் மண்டலம்.

**நகல்**
அ3 இருப்புக்கோப்பு